# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | தேனி | காலம் : | 01/06/2022 | முதல் | 05/06/2022 |
| அறிக்கை எண் : | 043/ 2022 | வெளியீட்டு நாள் : | 31/05/2022 | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (27.05.2022 முதல் 30.05.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 05-06-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **27/05** | **28/05** | **29/05** | **30/05** | தேதி | **நாள்-2 01/06** | **நாள்-2 02/06** | **நாள்-3 03/06** | **நாள்-4 04/06** | **நாள்-5 05/06** |
| 8.8 | 0.5 | 2.1 | 1.6 | மழை (மி.மீ) | 15 | 8 | 4 | 8 | 6 |
| 38 | 37 | 38 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 35 | 35 | 35 |
| 25 | 24 | 24 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 25 | 25 | 25 |
| 5 | 5 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 62 | 73 | 65 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 85 | 85 | 85 | 85 | 85 |
| 64 | 48 | 82 | 68 | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 5 | 4 | 5 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 8 | 8 | 8 |
| **வட மேற்கு** | **வட கிழக்கு** | **வடக்கு** | **தெற்கு** | **காற்றின் திசை** | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 1, 2, 4 தேதி மிதமான மழையும், 3, 5 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**அடுத்த தவா வாரத்திற்கான ணவி விரிவாக்கபட்ட டெவரம்பு வானிலைமுன்னறிவிப்பு (3 - 9 ஜூன் 2022) :**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை ஒட்டிய மழைப் பொழிவு காணப்படும்

**அதிகபட்ச சிவெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 30° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**
குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியோ காணப்படும். 18° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**
வரும் 01.06.2022 மற்றும் 02.06.2022 ம் தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள் இடி மின்னலில் இருந்து தங்கள் கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு கழுத்தில் கட்டியுள்ள உலோக மணிகளை அகற்றிவிடவும்.

ஆங்காங்கே சிறிதளவு மழை பெறப்பட்டுள்ளதாலும், அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் விவசாயிகள் உழவு செய்தல் மற்றும் நிலம் தயாரித்தல் வேலைகளுக்கு திட்டமிடலாம். மருந்து தெளிக்கும் வேலைகளை சற்றே ஒத்திவைக்கும் படியும் மழைநீரை சேகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, தென்னை, கால்நடை.**

**தக்காளி ரோஜா:**
- தக்காளி பயிரில் ஊசித்துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது.
- பூச்சியின் தாக்குதலால் தாக்காளியின் இலைகள், தண்டுகள் சுரண்டப்பட்டும். பழங்கள் ஊசி துவாரங்களுடன் காணப்படும்.
- ஒரு ஏக்கருக்கு 6 இனக்கவர்ச்சி பொறிகள் வைக்கலாம்.

**தென்னை:**
- மண்ணில் காணப்படுகின்ற ஈரப்பதத்தினை பயன்படுத்தி தென்னைக்கு நுண்ணுயிர் உரம் இடுதல் நல்ல பலனை கொடுக்கும்.
- மரம் ஒன்றிற்கு 50 கிராம் அஸோஸ்பைரில்லம், 50 கிராம் பாஸ்போபாக்டீரியா உடன் 50 கிராம் (வேம்) வேர் உட்பூசணத்தை தேவையான அளவு கம்போஸ்ட் அல்லது மக்கியத் தொழு உரத்துடன் கலந்து இளம் வேர்களில் படும்படி இடவேண்டும்.

**கால்நடை:**
- நிகழும் தட்பவெப்ப சூழ்நிலையின் காரணமாக ஆடுகளை ஆட்டுகொல்லி நோய் தாக்க வாய்ப்பு உள்ளது.
- இதனை தவிர்க்க எதிர்வரும் ஜூன் மாதத்தில் தங்களது ஆடுகளுக்கு ஆட்டுக்கொல்லி எனப்படும் பிபிஆர் நோய்க்கான தடுப்பூசி மருந்தினை போட்டுக் கொள்ளவும்.